**லங்கா சலுசல லிமிட்டட் - 2008/2009**

---

லங்கா சலுசல லிமிட்டட் கம்பனியின் 2009 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான 2008/2009 நிதியாண்டின் நிதிநிலைமைக் கூற்று மற்றும் வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2009 மார்ச் 31 இல் முடிவடைந்த 2008/2009 ஆம் நிதி ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக, பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் 2009 மார்ச் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்று, வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக, கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 கம்பனியின் தொடர்ந்து செல்லும் தன்மை**

---

லங்கா சலுசல லிமிட்டட் கம்பனி தொடர்ந்துசெல்லும் தன்மையினைக் கொண்டது என்ற எடுகோளின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தபோதிலும், கம்பனி 1992/1993 கணக்கீட்டு ஆண்டிலிருந்து நட்டங்களினை தாங்கியிருந்தது. 2009 மார்ச் 31 இல் உள்ளபடியான திரண்ட நட்டம் ரூபா 767,878,682 தொகையாகக் காணப்பட்டதுடன் கம்பனி

பங்குகளின் உரிமைத்துவத்தின் பற்றாக்குறை ரூபா 467,878,682 தொகையாகக் காணப்பட்டது. மேலும், கம்பனி ரூபா 7,000,000 இனை முதலீடுசெய்திருந்ததுடன் கம்பனி செயற்பாடற்ற நிலைமையொன்றில் காணப்பட்டமை காரணமாக குறித்த முதலீடுசெய்யப்பட்ட குறித்த பணம் மற்றும் உரிமைத்துவத்தின் நூறு சதவீத உரிமைத்துவத்தினைக் கொண்டிருந்த லங்கா டெக்ஸ்டைல்ஸ் மற்றும் எம்போரியம் கம்பனி லிமிட்டட்டிடமிருந்து மேலும் பெறவேண்டிய ரூபா 70,134,234 தொகையான தொகையினை பெறுவது நிச்சயமற்றதன்மையாகக் காணப்பட்டது. மேற்குறித்த தாக்கம் காரணமாக உரிமைத்துவம் நலிவடைந்து காணப்பட்டமையினால் திறைசேரி அல்லது அரசாங்கத்தின் ஏனைய நிதிசார் உதவியின்றி கம்பனியின் தொடரந்து செல்லும் தன்மையில் நிச்சயமற்றதன்மையொன்று காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரத்தினபுரி கிளையிலுள்ள பொருள் இருப்பின் பெறுமதி, 2009 மார்ச் 31 இல் உள்ளவாறு கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 17,892,200 இருப்பு பொருட்களுக்குள் மதிப்பீடுசெய்யப்பட்டு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 சனவரியில் சீரூடைகளின் போக்குவரத்திற்கு ஏற்பட்ட முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 101,570 தொகையான செலவினமொன்று, மீளாய்வு கணக்காண்டின் செலவினமொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக தலைமை அலுவலகத்திற்கு செலுத்தவேண்டிய ரூபா 147,006 தொகையான மின்சாரக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கணக்குகளுக்காக செலுத்தவேண்டிய கணக்காய்வு கட்டணத்திற்கு கணக்குகளில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2008 ஏப்ரல் 01 இல் உள்ளபடியாகக் காணப்பட்ட ரூபா 1,461,650 தொகையான கணக்காய்வு கட்டணத்தின் நிலுவைகள்கூட தீர்ப்பனவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) நீதிமன்ற கட்டளையொன்றின் மீது மீளாய்வாண்டின் போது கடன்கொடுத்தோருக்கு ரூபா 1,225,000 தொகை செலுத்தப்பட்டமையினால் சட்டச் செலவினங்களாக இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், கடன்கொடுத்தோர் கணக்கு சம பெறுமதியினால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 972,964 தொகையான பெறுமானத்தேய்வுகளின் மிகை ஏற்பாடு நிலையான சொத்துக்களுக்கு மீளாய்வாண்டிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 7 வங்கிக் கணக்குகளின் மேலதிகப்பற்று மீதிகளின் பிரகாரமுள்ள மீதிகள் மற்றும் வங்கி உறுதிப்படுத்தல்களுக்கிடையே ரூபா 25,699,136 வித்தியாசமொன்றை கொண்டிருந்ததுடன் 2 வங்கிக் கணக்குகளின் வைப்பு மீதிகளின் பிரகாரமுள்ள மீதிகள் மற்றும் வங்கி உறுதிப்படுத்தல்களுக்கிடையே ரூபா 23,514,284 வித்தியாசமொன்றைக் கொண்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு வகைகளுக்கு எதிராக சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால், கணக்காய்வில் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த அல்லது ஏற்றுக்கொள்ளமுடியாதிருந்தது.

| | வகை | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (அ) | மீதமாகவுள்ள இருப்பு | 17,892,200 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | திரண்ட பெறுமானத்தேய்வுகளுக்கான ஏற்பாடு | 47,775,818 | பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்ட முறை காண்பிக்கப்படும் அட்டவணை |
| (இ) | முதலீடுகள் | 7,000,000 | லங்கா டெக்டைல்ஸ் அன்ட எம்போரியம் கம்பனியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கான முதலீட்டு சான்றுப்பத்திரங்கள் |
| (ஈ) | வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர்கள் | 24,053,369 | கடன்பட்டோர் மீதிகளின் உறுதிப்படுத்தல், வயது பகுப்பாய்வு |
| (உ) | அறவிடமுடியாக் கடன்கள் மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு | 12,078,552 | அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களின் ஒதுக்கீட்டிற்கான அடிப்படை |
| (ஊ) | முற்பணங்கள் மற்றும் முற்செலுத்துகை | 11,573,597 | பட்டியல்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் |
| (எ) | ஊழியர் கடன்கள் | 1,418,459 | கடன்களுக்கான கடன் பதிவேடு, காலப்பகுப்பாய்வு |
| (ஏ) | பெறவேண்டிய வரிகள் | 4,558,719 | பட்டியல்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் |
| (ஐ) | தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து பெறவேண்டியவைகள் | 70,134,234 | பட்டியல்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் |
| (ஒ) | குறுங்கால வைப்புக்கள் | 23,859,572 | சுய ஓய்வூதிய திட்டத்துடன் தொடர்புடைய வைப்புக்களுக்கான உறுதிப்படுத்தல்கள் |
| (ஓ) | காசு மற்றும் வங்கி மீதி | 23,143,282 | பட்டியல்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் |
| (ஔ) | வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர்கள் | 352,817,722 | பட்டியல்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் |
| (க) | வங்கி மேலதிகப்பற்றுக்களின் மீதிகள் | 141,331,540 | 02 கணக்குகளுடன் தொடர்புடைய மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| (கா) | தடையை நீக்குதல் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் | 900,000 | 03 செலுத்துகை உறுதிச்சீட்டுக்கள் |
| (கி) | நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் | 2,451,052 | 03 செலுத்துகை உறுதிச்சீட்டுக்கள் மற்றும் தொடர்புடைய பற்றுச்சீட்டுக்கள் |
| (கீ) | பாடசாலை சீருடை செயற்திட்டம் | | செயற்திட்டத்தின் வருமானம் மற்றும் செலவினத்துடன் தொடர்புடைய தகவல் |
| | வருமானம் | 312,607 | |
| | செலவினம் | 2,607,138 | |

| | | | |
|---|---|---|---|
| (கு) | நிலையான சொத்துக்கள் | 24,594,955 | அளவைச்சபை அறிக்கைகள், உடைமை உரிமைப் பத்திரம், குத்தகை உடன்படிக்கைகள் |
| (கூ) | ஏனைய கடன்பட்டோர் | 6,938,495 | கடன்பட்டோர் மீதிகளின் உறுதிப்படுத்தல், காலப்பகுப்பாய்வு |
| (கெ) | ஏனைய வருமானம் | 20,305,232 | மீதிகளின் பட்டியல்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் |
| (கே) | நிதிக் குத்தகை | 1,724,622 | மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| (கை) | வங்கிக் கடன்கள் | 21,439,935 | மீதிகளின் உறுதிப்படுத்தல் |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு கணக்காண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 24,053,370 தொகையான மொத்த கடன்பட்டோர்களின் 50.22 சதவீதமாகக் காணப்பட்ட ரூபா 12,078,552 தொகையொன்று 2005/2006 கணக்காண்டிலிருந்து ஐயக்கடன்களாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2004 ஆம் ஆண்டிலிருந்து மீதிகீழ்க்கொண்டுவரப்பட்ட ரூபா 2,084,410 தொகையான 11 கடன்பட்டோர் மீதிகளினை அறவிடுவதற்கு 2009 மார்ச் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வு கணக்காண்டின் இறுதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர்களின் தொகை ரூபா 19,469,999 ஆகக் காணப்பட்டபோதிலும், கல்வி அமைச்சின் பெயரில் மற்றும் நலன்புரி கடன்பட்டோர்களாக முறையே ரூபா 8,045,387 மற்றும் ரூபா 4,510,876 கடன் மீதிகள் கழிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த கடன் மீதிகளினை இனங்கண்டு தீர்ப்பனவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வு கணக்காண்டின் இறுதியில் உள்ளபடியான ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு நீண்டகாலப்பகுதியொன்றிலிருந்து செலுத்தவேண்டியுள்ள ரூபா 39,829,636 கூட்டுத்தொகையான மீதியொன்று தீர்ப்பனவுசெய்யப்பட்டிராது கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வு கணக்காண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 430,039 தொகையான தொலைபேசி கட்டணங்களின் மீதிக்குள் நீண்ட காலப்பகுதியொன்றிலிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 294,107 தொகையான மீதியொன்று காணப்படுகின்றது.

(ஊ) ரூபா 5,389,872 தொகையான வரவு மீதி மற்றும் பல்வேறு வரிகளுடன் தொடர்புடைய கணக்குகளிலிருந்து மீதிகீழ்க்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 15,418,457 தொகையான செலவு மீதியொன்றினை தீர்ப்பனவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) செலுத்தவேண்டிய ரூபா 157,497,600 தொகையான வங்கி மேலதிகப்பற்று வட்டி நீண்ட காலப்பகுதியொன்றிலிருந்து கணக்குகளிலிருந்து மீதிகீழ்க்கொண்டுவரப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (அ) நிதிப்பிரமாணம் 395 | 10 வங்கி நடைமுறைக் கணக்குகளுடன் தொடர்புடைய வங்கி இணக்கக்கூற்றுக்கள் 2008/2009 கணக்கு காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ஆனால் வங்கி நடைமுறைக் கணக்கொன்றுடன் தொடர்பில் விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 4,110,231 பெறுமதியுடைய 62 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வு கணக்காண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளினை தொடர்புடைய முன்னைய கணக்காண்டின் ரூபா 17,402,986 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 72,829,342 பற்றாக்குறையொன்றை விளைவித்திருந்தமையினால், முன்னைய ஆண்டு கணக்குகளுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டின் கணக்குகளில் நிதிசார் விளைவுகளில் ரூபா 55,426,356 இனால் பற்றாக்குறையொன்றை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய மீளாய்வு கணக்காண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு கணக்காண்டின் வருமானம் ரூபா 30,110,167 இனால் குறைவடைந்திருந்ததுடன் விநியோகச் செலவினங்கள் மற்றும் நிர்வாகச் செலவினங்கள் ரூபா 14,931,224 இனால் அதிகரித்தமை மேற்குறித்த பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வு கணக்காண்டு மற்றும் 04 முன்னைய ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளினை பகுப்பாய்கையில், 2006/2007 கணக்காண்டினைத் தவிர ஏனைய கணக்காண்டுகளின் நிதிசார் விளைவுகளில் பற்றாக்குறை காட்டப்பட்டிருந்தது. 2006/2007 கணக்காண்டு காலப்பகுதியின் மிகைகளுக்கு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலம் ரூபா 194,340,862 இலாபம் உழைக்கப்பட்டமை மற்றும் செலுத்தவேண்டிய வட்டி வருமானம் ரூபா 62,583,288 இனால் பதிவழிக்கப்பட்டமை என்பன காரணமாகக் காணப்பட்டன.

தொடர்புடைய செலவினக் கணக்குகளில் அரச வரிகளுடன் தொடர்புடைய வருடாந்த செலவினங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்காததுடன் நிலையான சொத்துக்கள் மற்றும் சொத்துக்கள் பெறுமானத்தேய்வின் கணக்கீட்டிலுள்ள பிழைகள் காரணமாக குறித்த கணக்குகளின் துல்லியத்தன்மையினை திருப்திப்பட முடியாதிருந்தது.

**3.2 நிறுவனத்தினால் அல்லது நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்ட சம்பவங்கள்**

2016 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனிக்கு எதிராக முற்றுப்பெறாத 25 வழக்குகளுக்கு ரூபா 141,455,374 தொகையொன்று கம்பனியினால் வெளித்தரப்பினர்களுக்கு செலுத்தப்படவேண்டியிருந்ததுடன் கம்பனியினால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கொன்றிற்கு ரூபா 241,189 தொகையொன்று அறவிடப்படவேண்டியிருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தரமான புடவைகள் மற்றும் துணிகளினை விற்பனை செய்யும் நோக்கொன்றுடன் 1967 ஆம் ஆண்டில் கொழும்பு நகரத்தில் காட்சியறையொன்றுடன் சலுசல கம்பனி வியாபார நடவடிக்கைகளினை ஆரம்பித்திருந்தது. 1971 ஆம் ஆண்டில் 1970 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொது வியாபார கூட்டுத்தாபனங்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் அது மாற்றப்பட்டிருந்ததுடன் 1991 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக ஸ்தாபிக்கப்பட்டிந்தது. திறந்த பொருளாதாரத்துடன் போட்டியினை முகங்கொடுக்க முடியாததன் விளைவொன்றாக நிறுவனம் தொடர்ச்சியாக நட்டமொன்றை தாங்கியிருந்ததுடன் ஆகையினால், 2006 திசெம்பர் இல் சலுசல கம்பனி லிமிட்டட் கம்பனியை தவிர்ப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. லங்கா சலுசல லிமிட்டட் கம்பனி 2009 மே 15 ஆந் திகதிய 1601/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் தந்திரோபாய முயற்சிகள் முகாமைத்துவ முகவருக்கு (எஸ்ஈஎம்ஏ) கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தந்திரோபாய முயற்சிகள் முகாமைத்துவ முகவரினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவொன்றின் பிரகாரம் 2009 ஆகஸ்ட் 27 ஆந் திகதி பிஈடீ/சீஏபீ/ஐடீ/2009 ஆம் இலக்க அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ‘‘லங்கா சலுசல’’ இன் பெயரினை ‘‘லக் சலுசல’’ ஆக சட்டரீதியாக கூட்டிணைப்பதற்கு தேவையான ஆவணங்களினை தயாரித்து நிதி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிப்பதன் மூலம் லங்கா சலுசல கம்பனி லிமிட்டட்டினை கலைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீள்கட்டமைத்தல் சந்தர்ப்பத்தில், தலைமை அலுவலகத்திற்கும் மேலதிகமாக லங்கா சலுசல கம்பனி லிமிட்டட்டின் 19 கிளைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அதேநேரம், பொது முயற்சிகள் திணைக்களத்தின் PED 10 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அடிப்படையில் நிறுவகத்தின் 274 ஊழியர்களுக்கான சுய ஓய்வூதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் அதற்காக கொள்ளுப்பிட்டி, இரத்மலானை மற்றும் உணவடுனவில் அமைந்துள்ள ஆதனங்களை விற்பனை செய்து நிதிகளை பெற்றுக்கொள்வதற்கும் இலங்கை சுங்கம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பறிமுதல் செய்யப்பட்ட புடவைகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு முன்னர் அவற்றினை விற்பனை செய்யும் முதலாவது உரிமைத்துவத்தை லங்கா சலுசலவிற்கும் வழங்குவதற்கும் அமைச்சரவைத் தீர்மானம் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

(இ) லங்கா சலுசல லிமிட்டட் கம்பனியின் மீள் கட்டமைத்தலாக அமைச்சரினால் 2013 ஆகஸ்ட் 02 இல் சமர்ப்பிக்கப்பட்ட 13/0878/553/010 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், 2013 ஆகஸ்ட் 15 இல் பொது நிறுவனங்களுக்கு லங்கா சலுசல லிமிட்டட் கம்பனிக்குச் சொந்தமான ஆதனங்களினை கையேற்பதற்கு லங்கா சலுசல லிமிட்டட் கம்பனிக்கு பெறப்பட்ட குறித்த பணத்தினை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்புக்களின் அடிப்படையில் லங்கா சலுசல லிமிட்டட் கம்பனியின் மீள் கட்டமைப்பிற்கான விபரமான வியாபார திட்டமொன்றை அமுல்படுத்த மற்றும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க அமைச்சரவையிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கட்டாய விடுமுறையில் ஊழியர்கள் அனுப்பப்படுகின்றமை மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது புதிய ஊழியர்களினை ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றமை.**

(i) அமைச்சரவையின் அங்கீகாரமின்றி 2009 மே 15 ஆந் திகதிய புடவைகள் அமைச்சு செயலாளரின் எம்ரீஐ/டீ/3/1/2009 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கம்பனியின் தலைமை அலுவலகத்தில் வேலைபுரியும் 54 உத்தியோகத்தர்களைத் தவிர கிளைகளில் வேலைபுரியும் ஊழியர்கள் உள்ளடங்கலாக செலுத்துகைகளுடன் 2009 மே 15 இல் இருந்து 158 நபர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தனர். குறித்த ஊழியர்களுக்கு 2016 யூன் 30 வரையிலும் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 71,810,624 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. கட்டாய விடுமுறையில் ஊழியர்கள் அனுப்பப்பட்டமை காரணமாக வெளியூர் பிரதேசங்களிலுள்ள 11 கிளைகளினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) சம்பளத்துடன் மேற்குறித்த ஊழியர்களினை கட்டாய விடுமுறையில் அனுப்பியதன் பின்னர் கம்பனியின் பதவியணியினருக்காக அமைய அடிப்படையில் 2009 மே 15 இன் பின்னர் காலத்திற்குக் காலம் 84 ஊழியர்கள் ஆட்சேர்ப்புச்செய்யப்பட்டிருந்தனர். 2016 ஏப்ரல் 30 வரை சம்பளங்கள் மற்றும் படிகளுக்கு ரூபா 18,498,760 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. ஊழியர்களின் மீள் ஆட்சேர்ப்புக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்துடன் தொடர்புடைய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) ஜாவத்த காட்சியறையில் 2015 மார்ச் 16 இல் உள்ளபடியான இருப்புக்களின் மெய்மையாய்வில் ரூபா 163,168 தொகையான இருப்புக்களின் பற்றாக்குறை காணப்பட்டதுடன் இது தொடர்பில் முகாமைத்துவத்தினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான 6 வருடங்கள் காலப்பகுதிக்குள் புடவைகளின் விற்பனையிலிருந்து உழைக்கப்பட்ட ரூபா 21,204,695 வருமானத்திலிருந்து ரூபா 2,577,567 தொகையான கழிவொன்று கழிவிற்காக குறித்துரைக்கப்பட்ட சதவீதமொன்றை தீர்மானித்திராது அல்லது பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி தலைவர் அல்லது பதில் பொது முகாமையாளரினால் விரும்பியதாக பொருள் வழங்குபவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) கம்பனியின் தலைமை அலுவலகம் பேணப்படும் ஜாவத்தையில் அமைந்துள்ள காணிக்கு 2005 சனவரி 01 இலிருந்து 30 வருடங்கள் காலப்பகுதிக்கு மதிப்பிடப்பட்ட பெறுமதியின் குத்தகைக்கு காணி ஆணையாளர் திணைக்களத்தின் ப.ஒ.கொ/06/கொ/175 கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், கணக்காய்வுத் திகதியான 2016 ஏப்ரல் 30 வரை காணிகள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் வரிகளின் அடிப்படையில் பெறப்பட்டவற்றை சொத்துக்களுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆட்சேர்ப்புத் திட்டமானது அரச நிறுவனங்களினை வலுப்படுத்தும் நோக்கொன்றுடன் முன்மொழியப்பட்ட மீள்கட்டமைத்திலின் கீழ் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தசாசன மற்றும் சமய விவகாரங்கள் அமைச்சின் ஏற்பாடுகளிலிருந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சாரிகளினை பகிர்ந்தளிப்பதற்கான சாரிகளினை கொள்வனவுசெய்யும் கட்டளையொன்றின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் ரூபா 56 மில்லியனுக்கு ஒவ்வொன்றும் ரூபா 1,400 ஆன 40,000 சாரிகள் கொள்வனவுசெய்யப்பட்டிருந்தது. இந்த சாரிகளின் இருப்பு புத்தசாசன அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட விபரக்குறிப்புக்களின் பிரகாரம் அந்த சாரிகளின் இருப்பு காணப்படுகின்றனவா என்பதை இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனத்தினால் பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் விபரக்குறிப்புக்களிலிருந்து விலகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. பெறுகை வழிகாட்டல்களிலின் 2.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், ரூபா 25 மில்லியனை விஞ்சிய பொருட்கள் மற்றும் சேவைகளின் தொடர்புடைய கொள்வனவு அமைச்சு பெறுகைக் குழுவினால் அமுல்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அந்த செயற்பாடுகள் நிறுவகத்தின் கொள்வனவு குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பெறுகை கொள்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 548,819,679 தொகையான புடவைகளின் கொள்வனவில் 1.4.1, 1.4.2 மற்றும் 1.4.3 ஆம் பெறுகையிலுள்ள விழுமியங்கள், மற்றும் தொடர்புடைய பெறுகைகள், பெறுகை நோக்கம் 1.2 இற்கு முரணாக கம்பனியுடன் இணைக்கப்பட்டுள்ள தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.4 ஏனைய அரச நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள கம்பனியின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவிற்கு முரணாக 2000 நவம்பர் 23 இல் இருந்து 2015 யூலை 10 வரை சலுசல கம்பனியின் ஊழியரொருவர் அமைச்சரொருவரின் தனிப்பட்ட உத்தியோகத்தராக தேவைப்படும் சந்தர்ப்பங்களில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த காலப்பகுதிக்கு ரூபா 1,907,263 கூட்டுத்தொகையான சம்பளங்கள் மற்றும் படிகள் சலுசல கம்பனியினால் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 ஆளணி நிர்வாகம்

2009 மார்ச் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்தில் 08 உத்தியோகத்தர்கள், மூன்றாம் மட்டத்தில் 139 உத்தியோகத்தர்கள், இரண்டாம் மட்டத்தில் 101 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், நிறுவகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று காணப்பட்டிருக்காததுடன் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டு அறிக்கை நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும், 2008/2009 கணக்காண்டின் நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 12 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | (i) | சொத்துக்கள் இனங்காணப்பட்டு இருப்புப்படுத்தப்பட்டிருக்காததுடன் சொத்துக்களினை இனங்காணக்கூடியவாறு இலக்கமிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | பௌதீக மதிப்பாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | நிலையான சொத்துக்களின் விற்பனை இலாபம் முறையாக கணக்கீடுசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | | நீண்டகாலப்பகுதியொன்றிலிருந்து நிலுவையாகவுள்ள கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்களினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிக் கட்டுப்பாடு | (i) | தயாரிக்கப்படாத செலுத்துகை உறுதிச்சீட்டுக்களின் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை |
| | (ii) | செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய பட்டியல்கள் போதுமானதாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) கட்டிடங்களினை குத்தகைக்கு எடுத்தல் மற்றும் குத்தகைக்குவிடல் | (i) | முறையான குத்தகை ஆவணங்கள் பேணப்படாமை |
| | (ii) | குத்தகைக்கு விடும்போது போட்டி அடிப்படையில் குத்தகை வாடகைகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. |